DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | **S.C. 27/2021** |
| Deposition of Witness for | : | **P.W.9** |
| Name | : | **திரு. செல்வராஜ்** |
| Father's Name | : | **ஜேசுராஜ்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் எதிரி சிறையில் உள்ளார்.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 20.04.2026

முதல் விசாரணை:

1. நான் மதுரை அண்ணாநகர் குற்றப்பிரிவில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். நான் கடந்த 2019ம் வருடம் சிவகங்கை மாவட்டம், பூவந்தி காவல்நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணியில் இருந்த போது 14.06.2019ம் தேதி சுமார் 18.00 மணியளவில் 01.கிளாதிரி குரூப் கிராம நிர்வாக அலுவலர் சேகர் என்பவர் நிலையம் ஆஜராகி கொடுத்த புகார் மனுவினை பெற்று நிலையக்குற்ற எண்.67/2019 இதச பிரிவுகள் 286, 337 மற்றும் 9(B)(1)(b) Explosives Act 1884 ஆக பதிவு செய்தேன். நான் பதிவு செய்த **முதல் தகவல் அறிக்கை அ.த.சா.ஆ.3** ஆகும்.

2. புகார் மனுவையும், முதல் தகவல் அறிக்கையும் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். வழக்கின் ஆவணங்களை மேல் அதிகாரி பார்வைக்கு வைத்தேன். வழக்கு சம்மந்தமாக ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை:**

புகார்தாரர் புகார் கொடுக்கவில்லை என்றும் காவல் நிலையத்தில் வைத்து தாயர் செய்ப்பட்டது என்றால் சரியல்ல, கிராம நிர்வாக அலுவலர் புகார் கொடுத்தார். அ.த.சா.ஆ.2 முதல் தகவல் அறிக்கையில் அடையாளம் தெரியாத நபர் என்றும் எதிரியின் பெயர் குறிப்பிடவில்லை என்றும் சொன்னால் சரிதான். நான் சொன்ன நாள் மற்றும் நேரத்தில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI

Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.04.20 12:51:41 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர் ,**

**சிவகங்கை.**